(7) கவன ஈர்ப்புகள்.

(அ) மகாபலிபுரம் கடற்கரைப் பகுதிகளில் கடல் அரிப்பு.

திரு. மு. ஆறுமுகம் : பேரவைத் தலைவர் அவர்களே, மகாபலிபுரம் கோவிலுக்கு அருகில் உள்ள கடற்கரைப் பகுதிகளில் கடல் அரிப்பு ஏற்படுவதைத் தவிர்க்க, மரத்தினாலான கடல் அரிப்புத் துடப்பு அரண் கட்டுவது குறித்து—மாண்புமிகு நிதி அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.

மாண்புமிகு திரு. சி. இராமச்சந்திரன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மத்திய புதை பொருள் ஆராய்ச்சி நிறுவனத்தின் அறிவுரையின் பேரில் மத்திய பொதுப்பணித்துறை, மே 1978-ல் மகாபலிபுரத்தில் கடலில் தடுப்புச் சுவர் (groyne) கட்டத் துவங்கியது. இவ்வேலை பூனா மத்திய நீர் மின் நிலைய ஆராய்ச்சி நிலையத்தைக் கலந்து எடுத்துக் கொள்ளப்பட்டது. மத்திய அரசின் அதிகாரிகள், மகாபலிபுரத்தில் உள்ள புராதன கடலோரக் கோவிலைக் காக்க, இத்தடுப்புச் சுவர் அவசியம் என கருதினர். இவ்வேலை தற்போது நடைபெற்று வருகிறது.

2. இவ்வேலை ஆரம்பிக்கப்பட்டபின் இத்தடுப்புச் சுவரின் வட பாகத்தில், மிக அதிகமான கடல் அரிப்பு ஏற்பட்டது. மாமல்லபுர குப்பத்தின் மீனவர் காலனியருகே கடலரிப்பு பெரிய அளவிற்கு ஏற்பட்டிருக்கிறது. தமிழ்நாடு அரிசன வீடு அபிவிருத்தி வாரியத்தினால் 1976-ல் கடலோரத்தில் கட்டப்பட்ட 52 வீடுகள் அடங்கிய பகுதியும் ஆபத்திலிருக்கிறது. இதில் ஆறு வீடுகள் கடலரிப்பால் பாதிக்கப்பட்டு விட்டன. மேலும், இக்குப்பத்திற்கு வட பகுதியிலுள்ள இந்திய சுற்றுலா அபிவிருத்திக் கழகத்திற்குச் சொந்தமான கட்டிடங்களும் இக்கடலரிப்பால் பாதிக்கப்பட வாய்ப்பிருக்கிறது.

3. இவ்விஷயம், இந்த அரசின் பார்வைக்கு வந்தவுடன், மத்தியப் பணித் துறை தலைமைப் பொறியாளர் அவர்களுக்கு கடலரிப்பை மேலும் தடுப்பதற்கு துரிதமான நடவடிக்கை எடுக்கக் கோரி, 28—6—1978-ல் தந்தி செய்தி மூலம் கேட்டுக் கொள்ளப்பட்டது. தலைமைச் செயலாளரிடமிருந்து நேர்முகக் கடிதமும் உடனடியாக அனுப்பப்பட்டது. 3—7—1978 அன்று மத்திய அரசின் பணி மற்றும் வீடு வசதி செயலருக்கு அனுப்பிய நேர்முகக் கடிதத்தில் மத்திய அரசுத் துறையினர் எவரும் இக் கடலரிப்பால் ஏற்படும் பாதிப்பை எதிர் நோக்கி தேவையான ஆய்வுகளை இத்தடுப்புச் சுவர் கட்டிட பணி நிறைவேறும் காலத்திலேயே நடத்தவில்லையென எண்ணுவதற்கு தக்க காரணங்கள்

1978 செப்டம்பர் 9] [திரு. ச. இராமச்சந்திரன்]

இருக்கின்றன. ஏனெனில், ஆய்வுகள் நடத்தப்பட்டிருப்பின், இவ்வபாயத்தைத் தடுத்திருக்கலாம். அல்லது தேவையான தடுப்பு நடவடிக்கைகளையாவது சரியான நேரத்தில் எடுத்திருக்கலாம் எனக் கூறியுள்ளார். மத்திய அரசினுல் நியமிக்கப்பட்ட சிறப்புக் குழு, மத்திய பொதுப்பணித் துறையை, மேற்கூறிய இடத்தில் அதிக அளவில் மணலைக் கொட்டி கடலரிப்பை தடுக்க நடவடிக்கை எடுக்க கோரலாம் என தீர்மானித்துள்ளது. இவ் விஷயத்தில் துரித நடவடிக்கை எடுக்க மத்திய அரசை வற்புறுத்தியிருக்கிறோம்.

4. 29–7–1978 அன்று மத்திய அரசிடமிருந்து வந்த பதில் கடிதத்தில், ''தடுப்பு சுவர் கட்டியது மட்டும், இக்கடலரிப்பு ஏற்படுவதற்கு காரணமாக இருக்க முடியாது. பூனுவிலுள்ள மத்திய நீர் மின் ஆராய்ச்சி நிலையம் மேல் ஆய்வுகளை நடத்தி வருகிறது. இதற்கிடையில், மணலைக் கொட்டி கடலரிப்பை தடுக்க நடவடிக்கையும் எடுக்கப்பட்டுள்ளது'' எனக் கூறப்பட்டுள்ளது.

5. மத்திய பொதுப் பணித்துறை, இக்கடலரிப்பால் பாதிக்கப்பட்ட மீனவர்களுக்கு ஈட்டுமானத் தொகை வழங்கியுள்ளதாக கூறப்படுகிறது. மேலும் இந்த மீனவர்களுக்கு வேறு இடம் அளிப்பதற்கு, செங்கற்பட்டு மாவட்ட ஆட்சியாளர் நடவடிக்கை எடுத்து வருகிறார்.

6. இந்த அரசு, கடலரிப்புத் தடுப்புப் பணிகளை துரிதப் படுத்த கோரி, மத்திய அரசு அதிகாரிகளுடன் கலந்து தேவையான நடவடிக்கைகளை எடுக்கும்.

(முற்பகல் 10-20)

*திரு. மு. ஆறுமுகம்: பேரவைத் தலைவர் அவர்களே, மகாபலிபுரத்தில் பல்லவர் காலத்திலே கட்டப்பட்ட இந்தக் கற்கோயில், சரித்திர பிரசித்திப் பெற்றக் கோயிலாகவும், சிற்பக் கலையிலே சிறந்து விளங்குவதாகவும், உலக அதிசயங்களிலே ஒன்றுகவும் திகழ்ந்து வருகின்றது. அப்பேர்ப்பட்ட புராதனப் பெருமைவாய்ந்த, சிற்பக் கலை மிகுந்த கோயிலை பாதுகாக்க வேண்டுமென்பது தான் எங்கள் கவலையெல்லாம். இன்றையத் தினம் கடல் அரிப்பு, ஏற்பட்டு, அந்தக் கோயிலுக்கு பேராபத்து வரக்கூடிய நிலைமை இருக்கிறது. மத்திய அரசு செய்கின்ற பணிகள் விரைவாக நடைபெறுவதாகத் தெரியவில்லை. நானே நேரில் சென்று பார்த்த பிறகுதான், இந்த கவன ஈர்ப்பை இங்கே கொண்டு வந்திருக்கிறேன். ஆகவே, இந்தக் கடல் அரிப்பு தடுப்புச்சுவர் கட்டுவதற்காக மத்திய அரசு எவ்வளவு தொகையை யாரிடத்திலே கொடுத்திருக்கின்றது என்பதையும், இந்தப் பணியை நம்முடைய மாநில அரசு விரைவாகச் செய்யும்படியும்

வாய்மையே வெல்லும் TRUTH ALONE TRIUMPHS

இதைச் செய்வதற்கு மத்திய அரசிடமிருந்து தேவையான நிதி உதவிகளைப் பெற்று, விரைவாகச் செய்ய வேண்டுமென்றும் கேட்டுக் கொள்கிறேன்.

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : தலைவர் அவர்களே, மகாபலிபுரத்திலே உள்ள 6 ஆம் நூற்றுண்டிலே பல்லவர் காலத்திலே கட்டப்பட்ட இந்தக் கோயில் உண்மையிலேயே சரித்திரப் புகழ் வாய்ந்தது. ஆனால், மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொன்னதுபோல், அதை உலக அதிசயங்களில் ஒன்று என்று சொல்வது சரியாகாது. இந்தக் கோயிலை காப்பாற்றுவதற்காக, கடல் அரிப்பிலிருந்து இந்தக் கோயிலை பாதுகாப்பதற்காக தடுப்புச் சுவர் கட்டும் வேலை மத்திய அரசால் மேற்கொள்ளப்பட்டது. ஆனால், தடுப்புச் சுவர் கட்டியதன் விளைவாக, இன்றைக்கு இந்தக் கடல் பகுதிக்குப் பக்கத்திலே இருக்கின்ற குப்பத்திலே தண்ணீர் புகுந்துவிட்டது. ஆகவே, நம்முடைய அரசாங்கத்தின் சார்பிலே சொல்வது, நீங்கள் தடுப்புச் சுவர் கட்டப்போய், கோவிலைப் காப்பாற்றப் போய், இப்போது குப்பத்தை நாம் பறிகொடுக்கின்ற நிலைமை இருக்கின்றது என்று நாம் சொல்கிறோம். ஆனால் அவர்கள் ஏன் கடல் அரிப்பு ஏற்பட்டது என்பதைப்பற்றி பூனாவிலே இருக்கின்ற ஆராய்ச்சி நிலையத்தைக் கேட்டு, அதற்கு மேலே நடவடிக்கை எடுக்கிறோம் என்று சொல்லுகிறார்கள். பொதுவாக, இந்த செப்டம்பர் மாதத்திலே கடந்த ஆண்டு ஏற்பட்ட அனுபவம் இருக்கிறது. புயல் ஏற்படுமானால், கடலும், கடல் தண்ணீரும் உள்ளே வரும் என்ற அபாய நிலை இருக்கின்றது. ஆகவே, திரும்பத் திரும்ப மத்திய சர்க்காரை நாம் வற்புறுத்திக் கொண்டு வருகிறோம். கடல் அரிப்புத் தடுப்புச் சுவரை மேலும் கொஞ்சம் நீட்டினால், இந்த நிலைமை ஏற்படாது என்பதை வலியுறுத்திக் கொண்டு வருகிறோம்.

(ஆ) மேட்டூர் கெமிகல் கம்பெனிகளின் கழிவு நீரால் ஏற்படும் பாதிப்பு.

திரு. எம். அண்ணாமலை : தலைவர் அவர்களே, ''சேலம் மாவட்டம், மேட்டூர் ஆர்.சி. பிளாண்ட் இரசாயனக் கழிவு நீரால் ஊற்றுநீர் கெட்டு, தோட்டக் காடுகளில் உள்ள மரங்கள் பட்டுப்போய், வீரக்கல்புதூர் ஊராட்சிக்குட்பட்ட கிராமப் பகுதிகளில் 300 ஏக்கருக்கு மேற்பட்ட நிலங்கள் பாதிக்கப் பெற்றுள்ளதாலும், புதுச்சாம்பள்ளி;, கருமலைக் கூடல் பகுதியிலுள்ள குடிநீர் கிணறுகள் பாதிக்கப் பெற்றுள்ளதாலும், அப்பகுதி மக்கள் இடையே ஏற்பட்டுள்ள பதட்டநிலை குறித்த''.

அவசர பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினை, மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.